### ஹரியானா பல்கலைக்கழகத்துடன்

# பட்டமேற்படிப்பு மையம் புரிந்துணர்வு ஒப்பந்தம்



▶ புதுச்சேரி காஞ்சி மாமுனிவர் அரசு பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், ஹரியானாவின் சோனிபட்டில் உள்ள ரிஷிஹூட் பல்கலைக்கழகம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

**புதுச்சேரி, ஆக. 17:** புதுச்சேரியில் உள்ள காஞ்சி மாமுனிவர் அரசு பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் ஹரியானாவின் சோனிபட்டில் உள்ள ரிஷிஹூட் பல்கலைக்கழகத்தின் மனித அறிவியல் மையத்துடன் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தில் பட்டமேற்படிப்பு மைய இயக்குநர் சசிகாந்த தாஸ் மற்றும் ரிஷிஹூட் பல்கலைக்கழகத்தின் மனித அறிவியல் மைய இயக்குநர் சம்பதானந்த மிஸ்ரா ஆகியோர் கையெழுத்திட்டனர். மாணவர் பயிற்சி திட்டங்கள், ஆசிரியர்கள் பரிமாற்றம் மற்றும் பல்வேறு துறைகளில் கூட்டு ஆராய்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கிய இந்த ஒப்பந்தத்தின் நோக்கங்கள் குறித்து பேராசிரியர் மிஸ்ரா விளக்கினார். ரிஷிஹூட் பல்கலைக்கழகத்தை சேர்ந்த அனுஸ்ரீ, சமூக மேம்பாட்டுக்கு பங்களிக்கும் வகையிலான ஆராய்ச்சிகளுக்கு அதிக வாய்ப்புகளை வழங்கும் உள்ளூர் மொழி மற்றும் பூர்வீக அறிவின் முக்கியத்துவம் குறித்து பேசினார். முன்னதாக, டாக்டர் மேரி ஜோசபின் அருணா வரவேற்றார். இந்நிகழ்ச்சியில் ஐகியூஏசி ஒருங்கிணைப்பாளர், துறை தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

Dinakaran | 17/08/2026 | page no-13